பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 25 செவ்வாய்க்கிழமை 12.10.2021 கதிர் 341

**இனி இது ரகசியம் அல்ல!**

ஏர் பிடித்து உழுது, நெல் விதைத்து, சுமந்திரன் 'சீன்' போட்டார் என்று நானும் நமது தமிழ் சமூக ஊடகங்களும் வெளுத்து வாங்க, தெற்கில் கதை வேறு மாதிரிப்போகின்றது.

சுமந்திரன் ஏர் பிடித்த போட்டோக்களுக்கு பெரு ☞2

# தோல்வியை ஏற்ற கோட்டாபய உடன் பதவி விலக வேண்டும்!

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



(ந.லோகதயாளன்)

தனது அரசின் தோல்வியை மக்கள் மத்தியில் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். ☞11

## நேற்று தொற்று 681

இலங்கையில் நேற்று 681 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயிரத்து 64 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து ☞11

## சட்டத்தை அமுல்படுத்தாமையே அத்துமீறல் தொடரக் காரணம்!

### மீன்பிடி அமைச்சர் மீது சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(ந.லோகதயாளன்)

நாட்டில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அமுல்படுத்தாமல் இருப்பதே இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ச்சியாக நடப்பதற்குக் காரணமாக இருக்கின்றது. மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால் சட்டத்தை இயற்றிக் கொடுத்திருக்கின்றோம். இதற்கான ஆயுதத்தை உங்களிடம் கொடுத்திருக்கின்றோம். அதை வைத்துக் கொண்டு செயல்படுத்தாமல் விடுவது எங்களுடைய மீனவர்களுக்கே பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை நேற்று சந்தித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் வந்து எங்களுடைய மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்களை பாதிக்கச் செய்த பல விடயங்கள் அண்மைக்காலமாக நடந்திருக்கின்றன.

அவர்களுடைய லட்சக்கணக்கான ரூபா மீன்பிடி உபகரணங்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. இந்த விடயங்கள் ☞2

## மேலும் 23 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 12 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் ☞2

## மீண்டும் கொத்தணி உருவாகும் அபாயம்



### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

நாட்டில் வழிபாட்டுத்தலங்களில் பொதுமக்கள் மீண்டும் ஒன்றுகூடும் பட்சத்தில் மீண்டும் கொரோனாக் கொத்தணி உருவாகக்கூடிய அச்சுறுத்தல் நிலவுகின்றது எனச் சுகாதார தரப்பினர் எச்சரித்துள்ளனர்.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

வழிபாடுகளில் ஈடுபடும்போது உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## வடக்கின் புதிய ஆளுநர் கோட்டா முன் பதவியேற்பு



வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக, தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் உறுப்பினர் ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ☞2

## போதை மாத்திரை வர்த்தகர் சிக்கினார்

யாழ். ஏழாலையில் வீட்டில் வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆறு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய 9 ஆயிரத்து 60 போதை மாத்திரைகள் சந்தேகநபர் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் ☞2

## மாமாவின் கையை வெட்டி வீசிவிட்டு தற்கொலைக்கு முயன்ற மருமகன்!

### இருவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

(ந.லோகதயாளன்)

மாமனாரின் கையை வெட்டித் துண்டாக்கிய மருமகன் நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று மாலை நடைபெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காணித் தகராறு காரணமாக மாமனாருடன் முரண்பட்ட மருமகன் மாமனாரின் கையை மணிக்கட்டுக்கும் , முழங்கைக்கும் இடையில் வெட்டியுள்ளார்.

அதனால் கை துண்டாடப்பட்டுள்ளது. துண்டாடப்பட்ட கையை அருகில் இருந்த வாய்க்காலுக்குள் தூக்கி வீசிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்ற அவர் நஞ்சருந்தியுள்ளார்.

மாமனும் மருமகனும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் மேலும் 4 பேர் கைது

லங்கா சதொச வெள்ளைப் பூண்டு மோசடி தொடர்பில் மேலும் 4 அதிகாரிகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சதொசவின் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பான உதவி பொது ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வரவேற்பு. சேதன இரசாயனப் பிரச்சினையால் விவசாயிகள் படும் துன்ப, துயரம் அங்கு பெரிய விவகாரம் என்பது தெரிந்ததுதான். அதைத்தான் சுமந்திரன், வயலில் இறங்கி, ஏர் பிடித்து, விதைத்து, 'சிம்போலிக்' ஆக (குறியீட்டு முறையில்) காட்டுகின்றார் என்ற மாதிரி கதை அங்கு போகின்றது. அத னால் அந்த விடயத்துக்கு வரவேற்பு.

அது மட்டுமில்லை. தெற்கில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று ஒரு விடயம் செய்தது. முன்பத்தில் மேற்புறத்தில் ஒரு பக்கம் தலையில் முண்டாசு, பெனியன், சாரத்தோடு அசல் விவசாயியாக இரட்டை மாடு பூட்டி கலப்பையால் உழும் காட்சியை 'விவசாயத்தில் ஈடுபடும் சுமந்திரன்' என்ற தலைப்பில் ஒரு புறமும் – சேட், சூட், டையுடன் அநுராதபுரம் இராணுவ முகாமில் ஜனாதிபதி கோட்டாபய துடுப்பாட்ட மட்டையுடன் விக்கெட்டுக்கு முன்னால் இராணுவத்தினர் புடை சூழ நிற்கின்றமையை 'கிரிக்கெட் விளையாடும் கோட்டா...' – என்ற தலைப்புடன் மறுபுறத்திலும் பிரசுரித்திருந்தது.

தெற்கில் இவ்விடயம் கையாளப்படும் முறைமையை இச் செய்திகள் முன்வைக்கப்பட்ட விதம் தெளிவுபடுத்தியது.

அது மட்டுமல்ல, அந்தப் பத்திரிகையின் முன்பத்தில் 'நக்கல் நமசிவாயம்' என்ற கிண்டல் கார்ட்டூனிலும் ஒரு விடயம் சொல்லப்பட்டிருந்தது.

"மாடுகளைக் கட்டுப்படுத்த சுமந்திரன் பயிற்சி எடுக்கிறார் எண்டால் யோசிக்கத்தான் வேணும் பாருங்கோ...!" – என்று நக்கல் நமசிவாயத்தார் கூறுவதாக அந்த உரைநடை இருந்தது.

யார் அந்த மாடுகள் என்பதை நக்கல் நமசிவாயத்தாரும் விவரிக்கவில்லை. நானும் சுட்டப்போவதில்லை. அது யார் என்பதை வாசகர்களே ஊகித்துக்கொள்ளட்டும் அல்லது தீர்மானிக்கட்டும்.

ஆனால் என்னைக் கேட்டால் ஒரு விடயம் சொல்வேன். தறிகெட்டு ஓடி அலையும் மாடுகளைப் பட்டியில் அடைப்பது கஷ்டம். என்றாலும் எங்கள் மாடுகள், மணி கட்டின மாடுகள் சொன்னால் கேட்கும். ஆனால், மணி கட்டின மாடுகளை நாம் இழந்து ஒரு வனவாச காலம் தாண்டியாகி விட்டதே...!

★ ★ ★

விலை உயர்வுகளின் வரிசையில் அடுத்து வரவிருப்பது பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரிப்பு என்பதை பெற்றோலிய அமைச்சர் உதய கம்மன் பில்ல தெரிவித்திருக்கின்றார்.

"தற்போதைய நிலைமையை நான் மறைக்க விரும்பவில்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏதேனும் மானியம் அல்லது உதவியை நேரடியாக அரசு வழங்க முன்வராவிட்டால் இப்படியே தொடர்ந்து போகமுடியாது – உடனடியாக விலை அதிகரிப்பைச் செய்வதைத் தவிர" – என்று அவர் வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்.

தற்போதைய விலையிலேயே எரிபொருளை விற்றால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தினசரி பல கோடி ரூபாவை இழக்கவேண்டியிருக்கும். அது தாக்குப் பிடிக்க முடியாத நெருக்கடியைத் தரும் என்றார் அவர்.

"இப்போது ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 14 ரூபா 56 சதமும். ஒரு லீற்றர் டீஸலுக்கு 31 ரூபா 46 சதமும் நஷ்டம் ஏற்படுகின்றது. இதே போக்கில் போனால் ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று ஏழாயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்படும். அத்தகைய சூழலில் எரிபொருள் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாததாக இருக்கும்." – என்றார் அவர்.

காஸ், சிமெந்து, பால்மா, கோதுமை மா போன்றவற்றின் விலை அதிகரிப்பு பற்றிய செய்தியை அடுத்து, எரிபொருள் விலை அதிகரிப்புப் பற்றிய செய்தி வரப்போவது நிச்சயமாகிவிட்டது.

அடுப்படியில் பூனை தூங்கும் காலம் நெருங்குகின்றது. பாவம் இலங்கை மக்கள்!

– மின்னல் –

## மீண்டும் கொத்தணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொரோனா பரவலைத் தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்குவதன் ஊடாக வைரஸ் பரவல் வேகமாக அதிகரிக்க வாய்ப்பு இருக்கின்றது.

இன்னும் அவதானமான நிலைமையில் இருந்து மக்கள் மீளவில்லை.

சாதாரணமான நிலைமைக்கு மீண்டும் திரும்ப முடியும் என்பதை என்னால் எதிர்ப்பார்க்க முடியாது.

கொரோனாத் தொற்றுக்கு முன்னாள் உள்ள பழைய நிலைமைக்குச் செல்ல கூடியதற்கான வாய்ப்பு எந்தவிதத்திலும் இல்லை. புதிய சாதாரண முறையை நோக்கியே பயணிக்க வேண்டும்.

இந்தத் தொற்றில் இருந்து மீண்டு வருவதற்குப் பல தசாப்தங்கள் கூட செல்லலாம் – என்றார்.

## மேலும் 23 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 354 ஆக அதிகரித்துள்ளது.

## வடக்கின் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அலுவலகத்தில் நேற்று முற்பகல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், புதிய ஆளுநராக அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

## போதை மாத்திரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குறிப்பிட்டுள்ளனர்.

ஏழாலையைச் சேர்ந்த 38 வயது நபரே நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

## சட்டத்தை அமுல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சம்பந்தமாகவே இந்தியத் துணைத் தூதுவருடன் கலந்துரையாடினோம்.

2018ஆம் ஆண்டு இழுவை மடித் தொழிலைத் தடுக்க வேண்டும் என ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அது சட்டமாக்கப்பட்டாலும் மீன்பிடி அமைச்சு அந்தச் சட்டத்தை அமுல்படுத்தாமல் இருப்பதுதான் இதற்குப் பிரதான காரணமாக இருக்கின்றது. அந்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் இந்தப் பிரச்சினை பெரியளவிலே தீர்ந்து விடும்.

அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது இந்திய வெளிவிவகார அமைச்சு ஓர் எச்சரிக்கை ஒன்றை தமிழக மீனவர்களுக்கு விடுத்திருந்தது. ஒரு கடுமையான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது; ஆகவே, இலங்கை கடற்பரப்புக்குள் போகவேண்டாம் என்ற எச்சரித்தது. இதன் காரணமாக ஓரிரு வருடங்களாக வராமல் இருந்திருந்த தமிழக மீனவர்கள், அந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை எனத் தெரிந்த பின்னர் மீண்டும் வர ஆரம்பித்து விட்டார்கள்.

அத்துமீறுபவர்களைக் கைதுசெய்து இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வது என்பதை மீன்பிடி அமைச்சு செய்ய வேண்டும். ஆகவே, சட்டத்தை அமுல்படுத்தாமல் இருப்பதே அத்துமீறல் தொடர்ச்சியாக நடப்பதற்குக் காரணமாக இருக்கின்றது.

மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால் சட்டங்களை இயற்றிக் கொடுத்திருக்கின்றோம். இதற்கான ஆயுதத்தை உங்களிடம் கொடுத்திருக்கின்றோம். அதை வைத்துக் கொண்டு செயல்படுத்தாமல் விடுவது எங்களுடைய மீனவர்களுக்கே பாதிப்புக்களை ஏற்படுத்தும் – என்றார்.

## வெள்ளைப் பூண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முகாமையாளா, விநியோக நடவடிக்கைகளுடன் தொர்புடைய சிரேஷ்ட முகாமையாளா, விநியோக நடவடிக்கைகள் தொடர்பான முகாமையாளா மற்றும் வெலிசறை மொத்த வியாபார நிலையத்தின் முகாமையாளா ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனா.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகளுக்காக நேற்று வாக்குமூலம் வழங்க வருகை தந்திருந்தபோதே இவர்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனா.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள நால்வரையும் இன்று வெலிஸாரை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**லாண்ட்மாஸ்டர் விற்பனைக்கு**

ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட K8 - NITIA model லாண்ட்மாஸ்டர் Cobota latest version, Not registered with rota - weeler விற்பனைக்கு உண்டு.
விலை 400,000/=
நேரடியாகப் பார்வையிட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**0767403814**






காலைக்கதிர் Kalaikkathir

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட முடிவு

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்த சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாளை (புதன்கிழமை) காலை 8 மணிமுதல் மதியம் 12 மணி வரையில் இவ்வாறு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர்களுக்கான இட மாற்றங்கள் உரிய முறையில் இடம்பெறாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



## கைவிடப்பட்ட 4 கைக்குண்டுகள் மட்டக்களப்புப் பகுதியில் மீட்பு!

மட்டக்களப்பு- பெரிய காலபோட்டமடு பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் நான்கு கைக்குண்டுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வவுணதீவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, தாண்டியடி விசேட அதிரடிப்படையினரும் இணைந்து இந்தக் கைக்குண்டுகளை மீட்டுள்ளனர்.

பெரியகாலபோட்டமடு பிள்ளையார் ஆலயத்துக்கு பின்புறம் உள்ள வயற்காணியில் விதைப்பிற்கான ஆரம்பக்கட்ட வேலைகளை மேற்கொள்ளும்போது, கைக்குண்டுகளை கண்ட காணி உரிமையாளர், பொலிஸாருக்குவழங்கிய தகவலையடுத்து நான்கு கைக்குண்டுகளையும் அவர்கள் மீட்டுள்ளனர்.

இந்த 4 கைக்குண்டுகளும் கடந்த யுத்த காலப்பகுதியில் கைவிடப்பட்டவையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் 2020 ஆம் ஆண்டு 150 பேர் தற்கொலை செய்துள்ளனர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2020ஆம் ஆண்டு மாத்திரம் 150பேர், தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

சர்வதேச உள நல தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு உள நல உதவி நிலையத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் விசேட விழிப்புணர்வு செயலமர்வு நிகழ்வொன்று இடம்பெற்றது.

அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது, கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மாவட்டம் கடந்த 2 வருடங்களாக முடக்கப்பட்டிருந்த நிலையில், இறுக்கமான மன நிலையிலுள்ள மட்டக்களப்பு மாவட்ட மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

மேலும், தற்போதைய காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள நலம் தொடர்பில் பிரதேச மட்டத்தில் செயற்படும் உள நல உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களைத் தெளிவுபடுத்தும் வண்ணம் இந்தச் செயலமர்வு இடம்பெற்றிருந்தது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வீடுகளில் முடங்கியுள்ள சிறுவர்கள், மகளிர் மற்றும் முதியவர்களை எவ்வாறாக உள நல ஆற்றுகை மேற்கொள்வது, பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலை மாணவர்களை உள நல ரீதியாக எவ்வாறு ஆற்றுகைக்கு உட்படுத்துவது போன்ற மேலும் பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டிருந்தன.

மேற்படி நிகழ்வு மட்டக்களப்பு உளநல உதவி நிலையத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான அருட்தந்தை போல் சற்குணநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், உளநல விசேட வைத்திய நிபுணர்களான வைத்திய நிபுணர் கடம்பநாதன், பிராந்திய சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் உள நல பிரிவின் பொறுப்பாளர் வைத்தியநிபுணர் கே.அருள்ஜோதி, ஏறாவூர் வைத்தியசாலையின் உள நல பிரிவின் வைத்திய நிபுணர் டான் சௌந்தரராஜா, 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உள நல ஆலோசனைஉத்தியோகத்தர்கள் மற்றும் உள நல உதவி நிலையத்தின் உத்தியோகத்தர்களின்பங்கேற்புடன் மிகச்சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

## பண்ணை ஒன்றின் காவலாளி மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு- கொம்மாதுறை, தீவுப்பகுதியிலுள்ள பண்ணையின் காவலாளி சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர்ப்பற்று- ஒரு முலைச்சோலை கொம்மாதுறை பகுதியைச் சேர்ந்த 53 வயதான கனகரெட்ணம் தியாகராசா என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

கொம்மாதுறை தீவுப் பகுதியிலுள்ள கால்நடைப்பண்ணை ஒன்றில் இவர் கூலித்தொழிலாளியாக சுமார் 5 வருடமாக வேலை புரிந்து வந்துள்ளார்.

அந்தவகையில்ஞாயிற்றுக்கிழமை காலை, அவர் வீட்டில் இருந்து வேலைக்கு சென்றார் எனவும் அங்கு தகராறுகள் இடம்பெற்றன எனவும் உயிரிழந்தவரின்மனைவி தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவ இடத்துக்கு வருகைதந்த மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பொலிஸார் மற்றும் ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோர் மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தமையுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லுமாறும் பணிப்புரை விடுத்திருந்தனர். இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தடை சட்டத் திருத்தம் தொடர்பாகப் பிரித்தானியாவுடன் பேச்சு



பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்தம் செய்வது தொடர்பாக பிரித்தானியாவுடன் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சரா ஹல்டன் ஆகியோருக்கு இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. பொதுப் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது பொதுவான பிரச்சினைகள் குறித்தும் இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக பாதுகாப்பு, சட்ட அமுலாக்க நிறுவனங்களில் பிற நாடுகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாகப் பொது மக்கள் பாதுகாப்புஅமைச்சுதெரிவித்துள்ளது.

## கோதுமை மா, சீமெந்து விலைகளும் எகிறின

கோதுமை மாவின் விலையும் சீமெந்தின் விலையும் நேற்று (திங்கட்கிழமை) காலை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 50கிலோ சீமெந்துமூடையொன்றின் விலையை 93 ரூபாவால் அதிகரிக்க சீமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இதனையடுத்து, 50 கிலோ சீமெந்து மூடையின் தற்போதைய விலை 1,098 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கோதுமை மா கிலோவொன்றின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்க செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் தீர்மானித்துள்ளது.

## திருக்குமரன் நடேசனை விசாரணைக்காக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மீள அழைப்பு

முன்னாள் பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவரான திருக்குமரன்நடேசனுக்கு இலஞ்சஒழிப்பு ஆணைக்குழு மீளவும் அழைப்பு விடுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய பெண்டோரா ஆவணங்கள் தொடர்பாக மேலதிக வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக, எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆணைக்குழுவில் மீளவும் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையும், திருக்குமரன் நடேசன் ஆணைக்குழுவில் முன்னிலையாகி இருந்தார். இதன்போது அவரிடம் 3 மணித்தியாலம் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயேதிருக்குமரன் நடேசனுக்கு, ஆணைக்குழு மீளவும் அழைப்பு விடுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய பெண்டோரா ஆவணங்கள் குறித்து கிடைக்கப்பெற்றுள்ள சகல முறைப்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படுமென இலஞ்சஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





அடித்துக் கூறுகின்றார் பீரிஸ்

## 13 குறித்து இந்திய வெளியுறவுச் செயலாளர் எந்தக் கோரிக்கையும் முன்வைக்கவில்லை!

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் அல்லது திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக இந்திய வெளியுறவு செயலாளர் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆகவே இந்திய வெளியுறவு செயலாளரின் இலங்கை வருகை தொடர்பாக பல்வேறு தரப்பினர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை மறுக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கெரவலப்பிட்டிய மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றுவதற்கு இதுவரை எந்த ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை என்றும் கூறினார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இந்த விடயம் இன்னும் விவாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு நாட்டுக்கு நன்மை பயக்கும் ஒரு முடிவு எட்டப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டா கோடி காட்டும் செய்தி

இலங்கை இராணுவத்தின் 72ஆவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி நேற்றுமுன்தினம் அநுராதபுரம், சாலிய புர இராணுவ முகாமில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த விடயங்கள் மிக முக்கியமானவை.

சர்வதேச இராஜதந்திரத் தொடர்பாடல் சம்பந்தப்பட்ட விடயத்தில் கோட்டாபய அரசின் உண்மை முகத்தை அம்பலப்படுத்திக் காட்டுவதாக அது அமைகின்றது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் செய்து 35ஆவது ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு வடக்கு – கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு வழி செய்யும் விதத்தில் அப்போதே கொண்டு வரப்பட்ட 13ஆவது அரசமைப்புத் திருத்தம் இன்னுமே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சுமார் 35 வருடங்கள் கழிந்தும் 'பதின்மூன்றாவது திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கம்' என்ற தனது பழைய பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கின்றது இந்தப் பிராந்தியத்தின் மூத்த அண்ணனான இந்தியா.

இந்த விடயத்தில், இந்தப் பிராந்தியத்தின் வல்லரசு நடான தனக்கு இவ்வளவு ஆண்டுகள் கழித்தும் இப்படிப் பழைய பல்லவியைப் பாடிக் கொண்டிருப்பத் தவிர வேறு மார்க்கமில்லை, தான் கையாலாகாத நிலையில் இருக்கின்றோம் என்ற வெட்கம் – பிரக்ஞை – இந்தியாவுக்கும் இல்லை. இந்தியா இப்படி வலியுறுத்தியும் ஒரு காதால் அதனை வாங்கி மறுகாதால் அதனை வெளியிடுகின்றோம் என்ற ரோஷம் கொழும்புக்கும் இல்லை.

கடந்த வாரம் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவும் அப்பதவியில் தமக்கு முன்னர் இருந்த ஏனையோர் கடந்த மூன்று தசாப்த காலம் வலியுறுத்திய அதே விடயத்தை – பழைய பல்லவியை – தாமும் ஒரு பாட்டுப் பாடித் தீர்த்து விட்டுப் போயிருக்கின்றார்.

13ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல் ஆகியவை குறித்து இந்தியா விடுத்த வற்புறுத்தலுக்கு பதில் சலசலப்புக் காட்டுவது போல – புதுடில்லிக்கும் ஏனையோருக்கும் காதில் பூச்சுற்றுவது போல – ராஜபக்ஷக்களில் ஒருவரான நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மாகாண சபைத் தேர்தல் சட்டம் பற்றிய கதையை அவிழ்த்து விட்டு மாய்மாலம் பண்ணியிருக்கின்றார்.

ஆனால், இது விடயத்தில் தமது அரசின் உத்தேசம் – உள்தீர்மானம் – யாது என்பதை அநுராதபுரத்தில் இராணுவத்தினர் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோடி காட்டியிருக்கின்றார். அது அவதானிக்கப்பட வேண்டிய விவகாரமாகின்றது.

அந்த அறிவிப்பில் "அடுத்த ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு " – என்ற ஜனாதிபதியின் உறுதி மொழியைக் கவனித்த பலரும், ஜனாதிபதி கோட்டாபய குறிப்பிடும் அந்த அரசமைப்பு எத்தகையது என்பதையும் அவர் அதில் கோடி காட்டியிருக்கின்றமையை அவதானிக்கவே இல்லை.

"ருவான்வெலிசாயவில் என்னைச் சந்தித்த இளவயது பிக்கு ஒருவர் 'ஜனாதிபதியே ஒரே நாடு, ஒரே சட்டத்தை உருவாக்குவீர் என்று கூறினீர்களே. நாம் அதனை எதிர்பார்க்கிறோம்' என்றார். அடுத்த வருட இறுதிக்குள் அவ்வாக்குறுதியை நான் நிறைவேற்றுவேன்" – என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அவர் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்ற உத்தேசித்திருக்கும் புதிய அரசமைப்புப் பற்றிய விவரிப்புத் தான் இது.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற அரசமைப்பில், 13ஆவது திருத்தமும் இருக்காது, அதிகாரப் பகிர்வும் இருக்காது, மாகாண சபை முறைமையும் இருக்காது. கொழும்பில் உள்ள ஒரே அரசால் நாடு முழுமையாக ஒரே சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்படும்.

அதாவது தமிழருக்கும் பெப்பே, இந்தியாவுக்கும் பெப்பே. அதுதான் கோட்டாவின் செய்தி.

# மாகாணசபைத் தேர்தலை நடத்த இரண்டு வழிமுறைகள் உள்ளன

### ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு



மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்த இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன என வெளிவிவகார அமைச்சரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கடந்த வாரம் இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது, அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

இதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் இணங்கியதைத் தொடர்ந்து, அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வது தொடர்பாக ஆராய நிபுணர் குழுவொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் அறிக்கையானது இந்த வருட இறுதிக்குள் எமக்கு கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

அனைத்து தேர்தல்களையும் ஒரே முறையின் கீழ் நடத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு, மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்தவும் நாம் ஆலோசித்து வருகிறோம். இதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன.

ஒன்று கலப்புமுறையில் தேர்தலை நடத்த வேண்டும். இல்லையெனில், 2017 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தால் இல்லாது செய்யப்பட்ட தேர்தல் முறைமையை மாகாண சபைத் தேர்தலுக்கு மட்டும் மீளப் பயன்படுத்துவது தொடர்பாக நாடாளுமன்றின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். அப்படியாயின் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள நாம் தயாராகவே இருகிறோம்.

# பின்தங்கிய பிரதேசங்களில் கொவிட் தொற்றை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு வேலைத்திட்டம்



கிழக்கு மாகாணம் மற்றும் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளைச் சார்ந்த பின்தங்கிய பிரதேசங்களில் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சு மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் யுனிசெவ் அமைப்பு ஆகியன ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றன.

இந்த வேலைத்திட்டத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்தியர் அல் காசிம், யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி, பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமல் ஹரிச டி சில்வா என அமைச்சின் முக்கிய பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொருள்களின் விலை உயர்வுகளை கட்டுப்படுத்த முடியாத அரசு எதற்கு?

### இராதாகிருஷ்ணன் கேள்வி



பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியாத அரசாங்கம் எதற்கு, அமைச்சரவை எதற்கு என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் இறக்குமதியாளர்களும் உற்பத்தியாளர்களும் விலையைத் தீர்மானிக்கும் நிலைமை உருவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா - தலவாக்கலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே வே.இராதாகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மாகாணசபைகளுக்கான தேர்தல் பழைய முறைமையிலேயே நடத்தப்படும் என நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசாங்கம் அறிவித்துள்ளது.


எனவே, தேர்தல் நடைபெறுவதை நாம் வரவேற்கின்றோம். ஆதரவையும் வழங்குவோம். இந்தியாவின் அழுத்தத்தாலேயே தேர்தல் நடத்தப்படுகின்றது.

ஆனாலும் அவ்வாறு இல்லை என வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார். எம்மைப் பொறுத்தமட்டில் சர்வதேச அழுத்தத்தாலேயே தேர்தலுக்கான ஏற்பாடு இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, இதற்கு முன்னரெல்லாம் வரவு - செலவுத் திட்டம் வரும்போதுதான் பொருள்களின் விலை மறுசீரமைக்கப்படும். ஆனால் இன்று நாளாந்தம் அதிகரிப்பு இடம்பெறுகின்றது என கவலை வெளியிட்டுள்ளார்.

# தொழிற்சங்க கோரிக்கைகளை வென்றெடுக்க ஒத்துழைப்போம்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு கட்சி மட்டத்தில் கலந்துரையாடி நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பதாகவும், அவற்றிற்கு ஒத்துழைப்பதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தம்மைச் சந்தித்த ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

துறைமுக, மின்சக்தி, பெற்றோலிய ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் முக்கிய பிரதிநிதிகள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் சந்தித்து தங்களது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினர். அதன்போது கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கட்சியின் தொழிற்சங்க இணைப்பாளர் மஹிலால் த சில்வா ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், ஒன்றிணைந்த பிரஸ்தாப தொழிற்சங்க முக்கியஸ்தர்களிடம் அவர்களின் கோரிக்கைகளையும், அவற்றுக்கான விளக்கங்களையும் கேட்டறிந்த பின்னர் அங்கு வந்திருந்த ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு -

மின் சக்தி, துறைமுகம், பெற்றோலியம் போன்ற பொருளாதார ரீதியான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அரச நிறுவனங்களின் கூட்டு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எங்களை வந்து சந்தித்து அண்மைக்காலமாக இந்த நிறுவனங்களின் சொத்துக்களைப் பாராதீனப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்து வருகின்ற முயற்சிகள் சம்பந்தமாகத் தங்களுடைய பலத்த எதிர்ப்பை வெளியிட்டனர். அவர்கள் கூட்டு தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றனர் எனவும் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பில் உரிய விளக்கங்களைத் தருவதற்காவே அவர்கள் எங்களை வந்து சந்தித்தனர்.

அவர்கள் எங்களிடம் கூறியமையிலிருந்து , இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் தேர்தல் காலங்களில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை அப்பட்டமாக மீறி இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இது தொடர்பாகப் பல விதமான காரணங்களைச் சொல்லி, தனியார்மயப்படுத்தல் ஊடாக பாவனையாளர்களுடைய செலவினங்களைப் பொருத்தமான முறையில் கட்டுப்படுத்த முடியும் என்ற ஒரு விசித்திரமான சித்தாந்தத்தையும் அவர்கள் முன்வைக்கின்றனர்.

அதேவேளை, உபாய ரீதியாக நாட்டில் சர்வதேச சக்திகளுக்கு இடையில் இருக்கின்ற முரண்பாடுகளுக்கு நடுநிலையான அடிப்படையில் நாங்கள் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற புரிதலையும் நாம் உள்வாங்க வேண்டும்

உலக வல்லரசுகளுக்கு மத்தியில் நடக்கின்ற போட்டா போட்டியில் நாங்கள் ஒரு சமநிலையில் இருந்து, எங்களுடைய பொருளாதாரத்தை வழிநடத்த வேண்டும். தனியார்மயப்படுத்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடும் போது குறைந்தபட்சம் வெளிப்படைத்தன்மை சரிவரப் பேணப்பட வேண்டும்.

அவ்வாறன்றி, உரிய கேள்விப் பத்திரங்கள் கோரப்படாமல் மூடு மந்திரமாக வைக்கப்பட்டிருந்து செய்யப்படும் விவகாரத்தால் தான் இன்று தொழிற் சங்கத்தினர் வன்மையான எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகிறார்கள். பொருளாதார ரீதியாக நாட்டுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த சேவைகள் என்ற காரணத்தால் இவற்றை இவ்வாறு பாராதீனப்படுத்துவதன் மூலம் நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் வரும். அத்துடன் பாவனையாளர்களுக்கும் தேவையற்ற சிக்கல்களை உருவாக்கலாம்.

எதிர்காலத்தில் வெளிநாட்டவர்கள், ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு இவ்வாறான விடயங்களைத் தங்களுடைய கையில் எடுத்து சில விடயங்களை சாதித்து விடலாம் என்ற அபாயம் இருக்கின்றது என்றெல்லாம் பல காரணங்களை தொழிற்சங்கப் பிரமுகர்கள் முன்வைத்தனர்.

இந்த விவகாரமாக இதே அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்த போது இல்லாத பொல்லாத விடயங்களைச் சொல்லி இவற்றை எல்லாம் நாங்கள் செய்யவோ செய்ய விடவோ மாட்டோம். மிக வெளிப்படைத்தன்மையோடு நடந்துகொள்வோம் என்று சொன்ன வாக்குறுதிகள் எல்லாம் இப்போது காற்றில் பறந்து போய் விட்டன.

எனவே இந்த நிலையில் பல தொழிற்சங்கத்தினர் என்ன காரணத்துக்காக இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்குத் தங்களுடைய ஆதரவை வழங்கினர்களோ அவையெல்லாம் இப்பொழுது தலைகீழாக மாறி சர்வாதிகாரப் போக்கோடு இந்த அரசாங்கம் நடந்து கொள்கிறது என்று குற்றம் சுமத்தினர். அதில் உண்மை இல்லாமல் இல்லை என்பது எங்களுக்குத் தெளிவாக விளங்குகிறது.

இந்த விடயம் சம்பந்தமான தங்களுடைய போராட்டங்களுக்கு நாங்கள் எவ்வாறான ஆதரவை வழங்கலாம் என்பது தொடர்பில் கட்சி மட்டத்தில் ஆராய்ந்து அதனை முடிவெடுப்போம். இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் விவாதங்கள் வருகின்ற போது எங்களுடைய நிலைப்பாடுகளை மிகவும் காத்திரமாகவும், தெளிவாகவும் முன்வைப்போம்.

பால் மா விடயத்தில் அடிக்கடி வர்த்தமானி அறிவித்தல்களை அர்த்தமற்ற முறையில் வெளியிட்டு கட்டுப்பாடுகளை விதித்தாலும் ஒன்றுமே சாத்தியமாகவில்லை. இப்பொழுது முழுமையாக தனியார் கம்பனிகளிடமும், தனியார் ஆலை சொந்தக்காரர்களிடமும் பாவனையாளர்களுக்கான விலையை கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தை அரசாங்கம் கொடுத்து விட்டு மக்களை நடுத்தெருவில் விட்டிருக்கிறது. இதன் மூலம் இன்னுமொரு முறை அரசாங்கம் முழுமையாகத் தவறிழைத்து விட்டது. - என்றார்.

## புற்றுநோய் பாதித்த சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசியே பொருத்தமானது

பைசர் தடுப்பூசி பெற்றுக் கொடுக்கப்பட்ட புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இதுவரை எந்தச் சிக்கல்களும், ஒவ்வாமைகளும் பதிவாகவில்லை என நுண்ணுயிரியலாளர் விசேட வைத்தியர் சமன்மலீ குணசேகர கூறினார்.

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் தடுப்பூசித் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொவிட் 19 தடுப்பூசித் திட்டத்தின் கீழ் 12 முதல் 19 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் இம்மாதம் 4 ஆம் திகதி மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, இதுவரை சுமார் 60 சிறுவர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புற்றுநோயாளிகளின் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்களின் ஒப்புதலுடன் தடுப்பூசிகள் வெற்றிகரமாக வழங்கப்படுவதால், பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களுக்கு தடுப்பூசி போட அச்சப்பட வேண்டாம் என அவர் தெரிவித்தார்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் தடுப்பூசி செலுத்தல் ஆரம்பம்



இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள், பணிபுரியும் ஊழியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழகத்தில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று (திங்கட்கிழமை) காலை ஆரம்பிக்கப்பட்டன.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ்வரனின் வழிகாட்டுதலில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வதியும் வெளியிடப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் நேற்று தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டனர். நேற்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சினோபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பல்கலைக்கழக சுகநல நிலைய வைத்திய அதிகாரி எஸ். ராஜகுமார் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினாலேயே நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்

### மஹிந்த அமரவீர சூளுரை



சுதேச பொருளாதாரத்தை 70 களிலேயே வெற்றிகரமாக செயற்படுத்தியிருந்தால், இன்று இலங்கை சர்வதேசத்துக்குக் கடன் வழங்கும் நாடாக வளர்ச்சியடைந்திருக்கும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் பிரதமரான மறைந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் நினைவு தினத்தை முன்னிட்டு, இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் மேலும் அவர் தெரிவிக்கையில் -

இன்று இலங்கையின் 70 களில் இருந்த காலகட்டம் தொடர்பாக அனைவரும் பேச ஆரம்பித்துள்ளார்கள்.

அன்றைய காலகட்டத்தில் நாட்டில் சில பொருளாதார சிக்கல்கள் இருந்தமையை ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.

சீனிக்காக, அரிசிக்காக மக்கள் வரிசையில் அன்று காத்திருந்தமை உண்மைதான்.

இருந்தாலும், அன்று அதனை எதிர்த்தவர்கள் கூட தற்போது அவ்வாறான சுதேச பொருளாதாரத் திட்டத்தை வரவேற்றுள்ளார்கள்.

நாம் அன்று குறைந்தது இரண்டு வருடங்களுக்கேனும் அந்த சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருந்தால், இன்று இலங்கையில் பொருளாதார சிக்கல் ஒன்றே ஏற்பட்டிருக்காது.

சர்வதேசத்திடமிருந்து கடன் வாங்கும் நாடாக அன்றி, சர்வதேச நாடுகளுக்கு கடன் கொடுக்கும் நாடாக இலங்கை மாற்றமடைந்திருக்கும்.

மக்கள் இன்றும் எம் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நாட்டை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள் என்றார்.

## 75 பயணிகளுக்கு மட்டும் அனுமதி; கட்டுப்பாடு விமானத்தில் நீக்கம்

இலங்கை வரும் விமானத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒரு விமானத்தில் முன்பு அதிகபட்சமாக 75 பயணிகள் அனுமதிக்கப்பட்ட நிலையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிறுவனங்கள் அவர்களுக்கு ஏற்ற பயணிகளுடன் சேவையை முன்னெடுக்க முடியும் எனக் கூறியுள்ளது.

சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைவாக முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட பயணிகளுக்காக விமான நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இதேவேளை தடுப்பூசி பெறாத பயணிகள் 14 நாள்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 158

**அக்காலத்தை - எண்பதுகளின் கால கட்டத்தை - பற்றி ஆய்வு செய்யும் தற்காலத்து இளைஞர்கள், இந்த அட்டூழியங்கள் பற்றி என்ன எண்ணம் கொண்டுள்ளார்கள் என அறிந்து அதனையும் வாசகர்களுக்குத் தரலாம் என கருதி சில கேள்விகளை முன்வைத்தேன். அவர்களின் பதில்களை அப்படியே தருகிறேன். இது அந்த இளைய சமுதாயத்தின் சொந்த கருத்துக்கள். அதில் எள்ளளவும் உந்துதல்கள் இல்லை. அவை வருமாறு:-**

**தமிழ் மக்களுக்கு நடந்த அட்டூழியங்கள் பற்றிய உங்கள் எண்ணங்கள் என்ன?**

இன்றைய காலப்பகுதியில் இலங்கை அரசியலில் தமிழ் மக்கள் மீதான நிலைப்பாடு நிறம் மங்கிப்போனதாகவே உள்ளது. ஆனால் பாதிக்கப்பட்ட சாமானிய தமிழ் மக்களின் தரப்பாகவும் நிகழ்ந்தவற்றை பார்த்தவர்களாகவும் கேட்டவர்களாகவும் இருந்து கொண்டு இவ்வாறான ஒரு போராட்ட முடிவிற்கும் தமிழ் மக்களின் அவலத்திற்கும் எவ்வாறான காரண காரியங்கள் வழிவிட்டன என்பது இன்று எம்மிடத்திலுள்ள பொதுவானதொரு ஆய்வுப்பொருள்.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இருமுறை வவுனியா பொது வைத்தியசாலைக்கு பயணித்திருந்தேன். அப்போது எனக்கு பதினாறு வயது க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவி. நான் பார்த்த காட்சிகள் பல இரவுகள் என் நித்திரையை குலைத்திருக்கின்றன. இன்றும் மனதை கசக்கும் நினைவுகள் அவை. காரணம் அவை எந்தவொரு மனித குலத்திற்கும் நிகழ்த்தப்படக்கூடாதவை.

வைத்தியசாலையில் கட்டில்களின் பற்றாக்குறையினால் சிகிச்சைக்காக வந்தவர்கள் தரைகளில் கிடத்தப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு வார்ட்டிலும் நுழைவாயிலில் இருந்து உள்நுழைவதே கடினமாக இருந்தது. ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நகர முடியவில்லை. எங்கு பார்த்தாலும் காயப்பட்டவர்களும் அவயங்களை இழந்தவர்களுமாக இருந்தார்கள். ஒரு பக்கம் அழுகுரல்களுடனும் மறுபக்கம் ஏக்கமான பார்வைகளாலும் அவ்விடங்கள் நிறைக்கப்பட்டிருந்தன. அவர்களது பரிகாமன அனுபவங்கள் அவற்றை கேட்ட வேதனைகள் எவரையும் ஒருகணம் குலைக்கும்.

போரின் பின் நான் பாடசாலை சென்ற போது அங்கு வந்த பல மாணவிகள் போர் வலயத்தில் இருந்து தப்பிப் பிழைத்தவர்கள். அவர்கள் பட்ட அனுபவங்கள், அவஸ்தைகள், அவர்களது அபிப்பிராயங்கள் எல்லாமே எனது சிந்தனை நோக்குகளை நெறிப்படுத்தின. தமிழீழப் போராட்டம் குறித்து எனது பெற்றோரிடமிருந்தும் சுற்றத்தாரிடமிருந்தும் அறிந்து கொண்டதோடு இந்த வரலாற்றை படித்ததில் தெரிந்து கொண்டேன். போராட்டமானது ஒழிக்கப்பட்ட போதும் மக்கள் அழிவினை சந்திக்கும் போதும் நான் அங்கேயே இருந்தவள் என்பதால் சில கேள்விகளுக்கான பதில்களை அறிய விடுதலைப் போராட்டம் குறித்த நூல்கள் மற்றும் கட்டுரைகள் என வாசிக்கத்தொடங்கினேன்.

அவ்விடத்தில் இருந்து நான் நகர்ந்ததில் இருந்து இன்று வரை எனது சிந்தனையோட்டத்தில் பெரிதும் ஆராய்ந்தது இரண்டு விடயங்கள் தான். அடக்குமுறைக்குள்ளான ஓர் இனத்தின் விடுதலைக்காக தொடங்கப்பட்ட ஓர் போராட்டத்தின் முடிவு இவ்வாறான ஓர் அவலத்தில் முடிவடைய காரணம் என்ன?

ஓரினம் இவ்வாறாக சின்னாபின்னமாக்கப்பட்டு வன்முறைகளுக்குள்ளாகும் போது ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச நிறுவனங்கள், இந்தியா உட்பட



அன்டன் பாலசிங்கம்

டலான நாடுகள் மௌனித்தமை ஏன்? என்பனவே அக்கேள்விகள்.

நடந்தவற்றில் பிறர் தவறிற்கு சிறந்த நீதிபதிகளாகவும் எமது தவறிற்கு சிறந்த வழக்கறிஞர்களாகவும் வேடமிடுவதை நிறுத்தி எதிர்ப்பக்கம் மாத்திரம் சுட்டு விரலை காட்டி நிற்காமல் நாம் எங்கே தவறிழைத்தோம் என்பதை ஆராய வேண்டும்.

இது தான் இன்றைய இளைய சமுதாயம் உணர வேண்டியதாகிறது. இவை ஒன்றும் கண்கெட்ட பின்னரான சூரிய நமஸ்காரம் அல்ல. இலங்கையில் தமிழினம் அழிந்து விடவில்லை. பிரச்சினைகள் தீர்க்கப்படவும் இல்லை. எனவே விட்ட பிழைகள் அறியப்பட வேண்டும் இந்த அழிவிற்கு எமது பங்களிப்பு எவ்வாறாகிப்போனது என்பதை தெரிய வரலாற்றை திரும்பிப்பார்க்க வேண்டியது அவசியம். அப்போது தான் நிகழ்கால முடிவுகளையும் எதிர்கால நோக்கங்களையும் சரியாக கட்டியமைக்க முடியும்.

**போராட்டத்திற்கான தேவை இருந்ததாக எண்ணுகிறீர்களா?**

என்னைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிய விடுதலைப் புலிகளின் எழுச்சி ஓர் உரிமையை வென்றெடுப்பதற்கான நெறிமுறையான போராட்டம். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பமானது அடக்குமுறை அரசாங்கத்தினாலும் சிங்கள இனவெறி கும்பல்களாலும் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகளால் அவற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள இனத்தின் உரிமையை வென்றெடுக்கும் உயரிய நோக்குடன் ஆரம்பமானது. ஆனால் காலப் போக்கில் அதன் நெறிமுறைத்தன்மை கேள்விக்குள்ளான போது தான் அட்டூழியங்கள் பலவாகின.

**அதன் காரணங்கள் என்ன?**

உரிமைப்போராட்டமும் அதன் நெறிமுறைத்தன்மையும்

வரலாற்றினை நோக்கும் போது பல உரிமைப் போராட்டங்கள் வன்முறைகளுடன் நடத்தப்பட்டிருக்கின்றன சில வெல்லப்பட்டிருக்கின்றன பல தோற்றன. ஆனால் வன்முறை என்பது ஓர் எல்லைக்குட்பட்டு இருக்க வேண்டும். சர்வதேச மனிதாபிமான சட்டம் கூட போரினை தடுக்கவில்லை போரை சட்டத்திற்கு உட்பட்டு நிகழ்த்த வேண்டும் என்று தான் கூறுகிறது. வன்முறைகளும் தாக்குதல்களும் இருதரப்புக்கிடையேயும் நிகழ்த்தப்படலாம். ஆனால் எனது கருத்தாக கூற வருவது என்னவெனில் விடுதலைப் புலிகள் இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வு முறையை விட ஆயுதங்கள் மீதும் வன்முறை மீதும் அதீத நம்பிக்கையினை வைத்திருந்தார்கள் என்பதே எனது திண்ணம். திம்பு பேச்சுவார்த்தையில் எல்லா தமிழ்ப்பரப்புக்களாலும் ஏற்கப்பட்ட முடிவுகளிற்கு முரணாக ஆயுதங்களை ஏந்தியமையும் அல்லது ஒஸ்லோ பேச்சுக்களில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் அங்கீகரிப்பிற்கு பின்னர் அதை மறுத்து இடைக்கால நிர்வாகம் எனும் அறிக்கையை சமர்ப்பித்தமையும், இந்திரா காந்தி அம்மையாரின் முயற்சிகளுக்கு புலிகளின் தலைமை கொடுத்த வலுவற்ற அங்கீகாரமும் பின்னைய நாள்களில் (2001 - 2004) சமாதான முயற்சிகளில் புலிகளின் காலக்கடத்துகையும் இவற்றை வெளிப்படுத்துகின்றன.

இங்கு புலிகள் தன்னிச்சையாக காரணம் இன்றி ஆயுதமேந்தினர் என்றோ அல்லது இலங்கை அரசின் தமிழரின் மீதான பாசிச செயல்களை இல்லையென்றோ கூறவில்லை. தமிழ்மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகள் ஏராளம். ஆனால் அவை பொறுமையோடு சமாதான முயற்சிகளையும் உள்ளடக்கி கையாளப்பட்டிருக்கலாம் என்பதே எனது வாதம்.

இழப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது பொறுமைகாப்பது எப்படி சாத்தியம் என்பது பிரதிவாதமாக அமையின், விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட ஒவ்வொரு போரிலும் ஆயிரக்கணக்காண தமிழ் இளைஞர்கள் அழிந்தனரே? உதாரணமாக விடுதலைப் புலிகளின் ஆனையிறவினை கைப்பற்றும் முயற்சியில் மாத்திரம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் விதைக்கப்பட்டனர் என கேள்விப்பட்டிருக்கிறேன். அதுவும் பேரிழப்புத்தானே?. சமாதான முயற்சிகளில் வலுவான நிலைப்பாட்டினை கொண்டிருப்பின் இவ்வாறான இழப்புக்களை தவிர்த்திருக்கலாமே? இதுவரை காலங்களில் எத்தனை ஆயிரம் உயிர்கள் இப்போராட்டத்திற்காக இழக்கப்பட்டிருக்கின்றன?

போராட்டங்களின் நடுப்பகுதிகளில் கூட புலிகளின் தலைமைத்துவம் இழக்கப்பட்டவை போதும் என எண்ணி 2001 - 2004 காலப்பகுதிகளில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை கூட வலுவாக எண்ணியதாக எனக்குப் புலப்படவில்லை. காரணம் ஆயுதங்களையே அவர்கள் முழுமையாக நம்பியிருந்தனர். தலைமையானது போராளிகளை இழக்க தயங்கவில்லை. ஆயு



இந்திரா காந்தி

தங்களாலும், இழப்புக்களாலும் முன்னேறுவதே அவர்களின் எண்ணமாக இருந்தது.

ஒரு குழந்தையை தாய் பத்து மாதங்கள் சுமந்து வலிகளுடன் பிரசவித்து இலங்கை போன்ற ஓர் நாட்டின் சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியில் வளர்த்து அவர்களின் தோள்களில் இளைப்பாறும் பருவத்தில் அவர்கள் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்டு உயிர் தியாகம் செய்வதானது மகா உன்னதமான செயலாகும். ஆனால் அவர்களது தியாகத்தை பயனுள்ளதாக்குவதும் சரியான இலட்சியத்திற்கானதாகவும் அமைப்பதும் தலைமைத்துவத்தின் முழுமுதல் பொறுப்பாகும். ஆனால் பிற்காலத்தில் போராட்டத்தை வலுப்படுத்த கட்டாய ஆள்சோப்பில் அப்பாவி பெற்றோர்களும் பிள்ளைகளும் அனுபவித்தவையெல்லாம் வேலியே பயிரை மேய்ந்த கதை.

(வளரும்....)

# நாடாளுமன்றத்தில் உரையாற்ற அச்சங்கொள்ளும் நிலைமை!

## சாணக்கியன் எம்.பி. வேதனை



நாடாளுமன்ற உரை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கும் நிலையுள்ளதால் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்திலும் மக்கள் பிரதிநிதிகள் உரையாற்றுவதற்கு அச்சங்கொள்ளும் நிலையேற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,களுவாஞ்சிகுடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

களுவாஞ்சிகுடியில் உள்ள எனது அலுவலகத்தில் திருகோணமலையிலிருந்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் விசாரணைக்காக வருகை தந்திருந்தார். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாகவும் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் மண் அகழ்வு விடயமாக கேட்கவிரும்புகிறேன் எனக் கேட்டிருந்தார். அதற்கு நான் இணக்கம் தெரிவித்திருந்தேன். சரியான விடயத்தை செய்யப்போகின்றார்கள் என்று நம்பியிருந்தேன்.

ஆனால் 10-09-2021 சிங்கள பத்திரிகையொன்றில் கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்திருந்த செய்தியொன்று வெளிவந்திருந்தது. அதில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை வைத்து ஆளுநரால் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரிடம் 09 ஆம் திகதி ஒரு முறைப்பாட்டை செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரை என்ன என்பது கூட தெரியாமல் கிழக்கு மாகாண ஆளுநர் இவ்வாறாக நடந்துகொள்கின்றமை மிகவும் கவலையான விடயம். கிழக்கு மாகாண ஆளுநரைப் பொறுத்தவரையில் அவர் கிழக்கு மாகாணத்தில் முற்றுமுழுதாகத் தமிழ் பேசும் மக்களுடைய விடயங்களை சரியான வகையில் கையாளாகதவராகவே இருந்துவருகின்றார்.

கடந்த காலத்தில் மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை காணி விடயம் தொடர்பில் அவரின் செயற்பாடுகள், மண்மாபியாக்களைக் கட்டுப்படுத்திலான அணுகுமுறைகள், மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் அவர் நடந்துகொள்ளும் விதங்களைப் பார்க்கும்போது கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நலன்களை விட ஏனையவர்களின் நலனையே நோக்காகக் கொண்டு செயற்படுகின்றார். கிழக்கு மாகாண ஆளுநரின் செயற்பாடுகள் பொலிஸாரையும் நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடாகவேயுள்ளது.

நாடாளுமன்றத்தில் நான் பேசிய ஒரு விடயத்தை இவ்வாறு விசாரணை செய்யுமாறு கூறினால் வருங்காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு அச்சம்கொள்ளும் நிலையே ஏற்படும்.

கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனவாத அரசியலை செய்கின்றது என்று அவர் ஊடகங்களுக்கு எனது பெயரைக் கூறித் தெரிவித்தமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் என முறையிட்டபோதிலும் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அண்மையில் கூட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டமை அவரது சிறப்புரிமையை மீறும் ஒரு செயல். தியாக தீபம் திலிபன் நினைவுதினத்தை அமைதியான முறையில் அனுஷ்டித்தபோது அவரை கழுத்தைப்பிடித்து இழுத்துச் சென்றமை நாடாளுமன்ற உறுப்பினர் என்றதுக்கே மதிப்பளிக்காத தன்மையை அங்கு காணமுடிந்தது. கட்சி பேதங்களுக்கு அப்பால் மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கும் சிறப்புரிமையை மதிக்க வேண்டும்.

அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகத்தான் நாடாளுமன்ற சிறப்புரிமையும் சவாலுக்கு வந்துள்ளது. இது தொடர்பில் சபாநாயகர் தனது கவனத்தை செலுத்தவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையைப் பாதுகாக்க வேண்டியது அவரின் பொறுப்பு.

கிழக்கு மீட்பு கோஷத்தை செய்துவந்தவர்கள் இன்று காணி, மண் என பல கொள்ளைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் தங்களுக்கு வாக்களித்த மக்களுக்காக ஏதாவது செய்யவேண்டும்.

இன்று ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 பேருக்கு மட்டுமே இவர்களால் பெற்றுக்கொடுக்கமுடிந்தது.

2021 ஆம் ஆண்டு ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் 33 ஆயிரத்து 325 பேருக்கு இலங்கையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் சிங்கவர்களுக்கு 31 ஆயிரத்து 517 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கு 1,060 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது, 748 முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 33 ஆயிரத்து 325 பேரில் வெறும் ஆயிரம் தான் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் 25 வீதத்திற்கு மேல் தமிழ் பேசும் மக்கள் வாழும்போது இனவிகிதாசார அடிப்படையில் வழங்கியிருந்தால் கூட இதில் 8 ஆயிரம் பேருக்காவது நியமனங்கள் வழங்கியிருக்கவேண்டும். இந்த விடயத்தைக்கூட உங்களால் கையாளமுடியாவிட்டால் உங்களால் என்ன அபிவிருத்தியை செய்யமுடியும்.

அண்மைக்காலமாக தூக்கத்திலிருந்த சில இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கும் இங்கும் கருத்துச்சொல்கின்றமையும், ஒருநாளும் நாடாளுமன்றத்தில் உரையாற்றாதவர்கள் இன்று பேசிக்கொண்டிருக்கின்றார்கள். சாணக்கியன் பேசுகின்றார் என்ற காரணத்தால் உங்களது மக்களுக்கு ஏதாவது குரல் கொடுக்கவேண்டும் என்று உங்களுக்கு ஆர்வம் வந்தமையை வரவேற்கின்றேன்.

20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் 748 முஸ்லிம்களுக்குதான் நியமனம் வழங்கப்பட்டுள்ளது தொடர்பிலாவது சிந்தித்திருக்கவேண்டும். தனிப்பட்ட இலாபங்களுக்காக மாறிவிட்டு என்னை விமர்சிக்கவரவேண்டாம். நான் நாடாளுமன்றத்தில் அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்காகக் குரல்கொடுப்பேன். இதுவே எங்களது கட்சியின் நிலைப்பாடுமாகும்.

தேசிய இனவிகிதாசாரத்தில் நியமனங்களைக்கூட பெற்றுவழங்கமுடியாதவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றமை தங்களது தனிப்பட்ட சுயலாபங்களுக்காகவேயாகும். – எனத் தெரிவித்தார்.

# தனது இறுதி மூச்சு வரை நல்லூர் கந்தனுக்காக உழைத்த பெருந்தகை குமாரதாஸ் மாப்பாணர்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் இரங்கல்



மறைந்த இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் 1964 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் நாள் தொடக்கம் தமது இறுதி மூச்சு வரை நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக கடுமையாக உழைத்து தமது 92 ஆவது அகவையில் தமது பூவுலக கடமைகளை மனநிறைவுடன் பூர்த்தி செய்து ஆறுமுகக் கடவுளின் பாதாரவிந்தங்களைப் பற்றிச் சென்றுள்ளார். அவர் மறைவு எம்மை ஆறா துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமாகிய க.வி.விக்னேஸ்வரன். அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கிட்டத்தட்ட 57 வருடங்களாக நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தை எந்தவித குறைவுமின்றி அதன் நிர்வாகத்தை திறம்பட முன்னெடுத்துச் சென்றமை அவரின் நிர்வாகத்திறனை படம்போட்டுக் காட்டுகின்றது.

அவரின் நிர்வாகத்திறமைக்கு அவரின் இயல்பான நிர்வாக திறமையுடன் இணைந்து அவரின் அடிப்படை கல்வி அறிவு மற்றும் மொழித்திறன் என்பன பக்கபலமாக அமைந்திருந்தன. அவரின் பாரியார் அவருக்கு உற்றதுணையாக இருந்தார்.

அவரின் நிர்வாகத்திறன் அனைவராலும் பாராட்டப்பட்டதொன்று. ஆலயத்தில் அடியவர்களுடன் தானும் ஓர் அடியவனாக எளிமைத் தோற்றத்தில் காட்சியளித்த அவரின் கண்கள் ஆலயத்தில் நடைபெற்ற அனைத்து விடயங்களையும் ஊன்றி அவதானித்து சீர்செய்யத் தவறியதில்லை.

ஆலயத்தினுள் அரசன் தொடக்கம் கடைநிலை ஆண்டிவரை சமநிலை உடையவர்கள் என்பதை இறுதிவரை நிலைநிறுத்தியவர். எந்தவொரு பிரமுகரின் வருகைக்காகவோ வேறு எந்தக் காரணங்களுக்காகவோ ஆலயத்தின் பூஜை வழிபாட்டு நேரங்களில் மாற்றம் விளைவிக்க அவர் அனுமதித்தவரல்லர். தமது குடும்ப அங்கத்தவர்கள் கூட சாதாரண அடியவர்களுடன் சேர்ந்து ஆலய தரிசனத்தை மேற்கொள்ளலாமே தவிர அவர்களுக்கென எந்தவொரு பிரத்தியேக சலுகையையும் வழங்க அவர் அனுமதித்தவரல்லர்.

அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும் அடியவர்களை ஆற்றுப்படுத்தும் தூய பணியில் இளைய எஜமானார் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று தந்தையின் வழியில் சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றார். அவருக்குத் தேவையான சக்தியையும் மனப் பலத்தையும் முருகப் பெருமான் அருள வேண்டுமென இறைஞ்சுவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்

அவரின் அன்பு மனைவி, உற்றார், உறவினர்கள் அனைவரையும் இப்பெருந்துயரத்திலிருந்து மீள இறைவன் வழி சமைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். – என்றுள்ளது.

# ஆளுமை மிக்க சேவகனை இழந்தது நல்லூர் ஆலயம்!

## சித்தார்த்தன் எம்.பி. இரங்கல்

வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் முருகப்பெருமானின் அறங்காவலராக ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பண்பாளர் ஸ்ரீமான் குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் இழப்பு அறிந்து மிகுந்த வேதனையடைகின்றேன்.

– இவ்வாறு தனது இரங்கலில் தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றான நல்லூர் கந்தன் ஆலயத்தை மிகவும் சீரும் சிறப்புடனும் பல சவால்களுக்கு மத்தியிலும் ஆண்டவன் சந்நிதானத்தில் அனைவரும் சமம் என்று எவருக்கும் அடிபணியாது, எவருக்காகவும் நல்லூர் ஒழுங்கு விதிகளை மாற்றியமைக்காது தனது இறுதி மூச்சு வரை பின்பற்றி சமயத்துக்கு சேவையாற்றிய பெருமகனை சைவ உலகம் இன்று இழந்து நிற்கின்றது.

சைவசமய மக்களால் மதிக்கப்படுகின்ற நல்லூர் ஆலயத்தின் அறங்காவலர் என்ற ஆடம்பரம் இல்லாது மிகவும் எளிமையாகப் பக்தர்களுடன் பக்தனாக இருந்து நல்லூர் கந்தன் ஆலயத்தை மிகப் பெரிய சைவ சமயத்தின் உலக அடையாளமாக வளர்த்த பெருந்தகை இவர்.

எளிமையான அவர் வாழ்வின் பக்குவம் எல்லோருக்கும் அமைவதில்லை, அவருடன் பழகக்கிடைத்த பொழுதுகள் எனக்கு அர்த்தம் நிறைந்த பொக்கிஷமான நினைவுகள்.

அத்தகைய பெருந்தகையை நல்லூர் கந்தன் தனது திருவடிக்கு அழைத்து விட்டார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கந்தனை வேண்டுகின்றேன். – என்றுள்ளது.

# சபையை குழப்பி அபிவிருத்திகளை தடுக்கும் செயற்பாடுகள் மட்டக்களப்பில் முன்னெடுப்பு

## முதல்வர் சரவணபவன் வேதனை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருக்கும் மட்டக்களப்பு மாநகர சபையைக் குழப்புவதும் அதன் மூலமாக அபிவிருத்திகளைத் தடுப்பதற்குமான நோக்குடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி. சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் –

மட்டக்களப்பு மாநகர சபையில் 150 இற்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் உள்ளனர். இவர்களது நியமனங்களைப் புதுப்பிக்கும் போது எந்த நியமனமும் எதிர்வரும் காலங்களில் மேற்பார்வையாளரின் உறுதிப்படுத்தலும் முதல்வரின் அனுமதி கிடைத்த பின்னர் தான் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று ஜூன் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் கடந்த மாதம் 03 உத்தியோகத்தர்களுக்கு சேவை நீடிப்பு கோரிக்கை வழங்கப்பட்டிருந்தது. ஏற்கனவே, எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நீடிக்கப்படலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தெளிவான தீர்மானத்தை விளங்கிக் கொள்ளாமல் மாநகர சபை ஆணையாளர் அவருக்கு நியமனம் வழங்கியுள்ளார். இது மாநகர சபையின் சட்டத்தை மீறிய செயற்பாடாகும். மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் மாநகர சபைத் தீர்மானங்களுக்கு எதிராக எந்தவிதச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாது. நியமனங்களைப் பிழையான வகையில் வழங்கினால் சபை அதனைப் பொறுப்பேற்காது, நானும் பொறுப்பேற்க முடியாது.

அவ்வாறு பிழையான நியமனங்களை வழங்கும் போது அவர்களுக்கு சம்பளம் வழங்கும் போது எங்கள் அனுமதிக்கு அவை வரும்போது தான் எங்களால் சிபாரிசு செய்யப்படாத ஒருவருக்கு சட்டவிரோதமாக நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

சட்டவிரோதமாக வழங்கப்பட்ட நியமனம் பற்றியும் அதனால் ஏற்பட்ட பிரச்சினை பற்றியும் மாகாண சபையின் கீழிருக்கின்ற அதிகாரிகளுக்குத் தெளிவாக அறிவித்திருக்கின்றோம், உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்திருக்கின்றோம். இது சம்பந்தமாக அவருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு பிரதம செயலாளருக்கு அறிவித்திருக்கின்றோம், ஆளுநருக்கு அறிவித்திருக்கின்றோம். இவர்கள் இருவருமே எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் உள்ளூராட்சி ஆணையாளர் தெளிவான விளக்கம் கோரியிருக்கின்றார். மாநகர சபைத் தீர்மானத்தை மீறி உங்களால் எவ்வாறு நியமனம் வழங்க முடியும் என்றும் உடனடியாக இது சம்பந்தமான விளக்கத்தை வழங்குமாறும் அவர் கேட்டிருக்கின்றார். அத்துடன் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டிருக்கின்றார். அதற்கு பதிலளிக்கும் முகமாக ஆணையாளர் எனக்கு பிரதியிட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் என்று அதில் குறிப்பிட்டிருக்கின்றார். 5 நாள்கள் கடந்து விட்டன. ஆனால் அவர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மாநகரசபையில் இருந்த திறப்புகள் அனைத்தும் களவாடப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக நான் வேலைப் பகுதிக்கு பொறுப்பாக இருக்கின்ற பொறியியலாளருக்கு கடிதம் அனுப்பியிருக்கின்றேன். இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும் உரியவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும் உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு நான் அவருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றேன்.

ஆனால் இன்று வரை பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை. வேண்டுமென்று மாநகர சபைச் செயற்பாட்டைக் குழப்புவதற்கும் பொதுமக்களுக்கு பிழையான தகவல்களை வழங்குவதற்குமாகவே இங்கு நிர்வாகத்தில் இருக்கின்ற ஆணையாளர் இருக்கின்றார். எடுக்கப்பட்ட தீர்மானங்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், ஆணையாளருக்கு விளக்கம் கோரி வந்த கடிதங்கள் அனைத்தும் இருக்கின்றன. ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் என்ற ஆணையாளரின் கடிதமும் இருக்கின்றது.

அலுவலக ரீதியாக இவை அனைத்தையும் செய்துவிட்டு களத்தில் வேறு முறையில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அலுவலக உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையாளர் முயற்சிப்பார் என நினைக்கின்றேன். பிழையாக வழங்கப்பட்ட நியமனம் மீளப் பெறப்பட வேண்டும். அதன்பின்பு வரவிருக்கின்ற எங்களுடைய சபைக் கூட்டத்தில் அவர் கடமை புரிந்த காலத்துக்கான கொடுப்பனவை எவ்வாறு வழங்குவது என்பதைத் தீர்மானிக்கலாம்.

குறிப்பிட்ட நபர் தவிர்ந்த அனைவரும் வேலைக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் வேலைகளில் எந்தவித தாமதமும் இருக்கக்கூடாது எனவும் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கி இருக்கின்றார். ஆனால் இவை அனைத்தும் உதாசீனம் செய்யப்பட்டு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் நான் எமது அபிவிருத்திக் குழு இணைத் தலைவருடனும் கலந்துரையாடினேன். அவருக்கும் இது தொடர்பில் தெளிவின்மை இருந்த காரணத்தால் நான் இது தொடர்பான ஆவணங்களை அவருக்கு அனுப்பிவைத்துள்ளேன். அவரும் இது தொடர்பில் ஆணையாளருடன் கதைப்பார் என நம்புகின்றேன்.

மாநகரசபையின் செயற்பாடுகள் சுமுகமாக நடைபெறுவதற்கு ஆணையாளர் தன்னால் விடப்பட்ட பிழைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். அவர் திருத்தும் பட்சத்தில் மாநகர சபை ஒழுங்காக இயங்கும். குறித்த நியமனம் வழங்கப்பட்ட நபருக்கு எதிராக ஏற்கனவே சில ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜி.கே. பவுண்டேசனால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த அமரர் ஊர்தியானது இங்கே தரித்து வைக்கப்பட்டிருந்தது. ஆணையாளர் இந்த விடயத்தில் தீவிரமாக தலையிட்டு அந்த வாகனத்தை சேதப்படுத்தி எங்கள் தீர்மானங்களை மீறி அதனை அப்புறப்படுத்தியபோது குறித்த நபரே சாரதியாக செயற்பட்டிருந்தார். இது தொடர்பிலான வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கின்றது. இந்த வழக்கு தீர்ப்பு வழங்கப்படும்வரை இவருக்குரிய நியமன நீடிப்பை எங்களால் வழங்க முடியாது.

மாநகர சபை முதல்வரின் அனுமதியின் பின்பு தான் நியமனக் கடிதங்கள் வழங்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த தீர்மானத்தை மீறி இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. மாநகர சபை கட்டளைச் சட்டத்தை மீறிய இந்தச் செயலை எங்களால் அனுமதிக்க முடியாது.

இதற்கு உடனடியாக மாநகர சபை நிர்வாக ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய உள்ளூராட்சி ஆணையாளர், பிரதம செயலாளர் ஆகியோர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வாகனங்களுக்குப் பொறுப்பாக பொறியியலாளர் இருக்கின்ற போது வேலைப் பகுதி முழுமையாக ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டு பொறியியலாளரிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேளை, பொறியியலாளரின் பணிப்புரைக்கு அமையவே உத்தியோகத்தர்கள் வேலை செய்ய வேண்டும். ஆணையாளரின் பணிப்புரைக்கமைய வேலை செய்ய முடியாது. ஆணையாளரிடமிருந்து அதிகாரங்களை பெற்ற பின்பு அவருக்கு இருக்கின்ற நேரடி அதிகாரம் 254 இற்குக் கீழ் அறவிடவேண்டிய பிந்திய அறவீடுகளை அறவிடுவதும் வீதியோர வியாபாரத்தை தடை செய்வதுமாகும்.

மிகுதி அனைத்தும் மீளப்பெறப்பட்டு வேறு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதை மீறி அவரால் செய்யப்படுகின்ற அனைத்தும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டத்தை மீறுகின்ற செயற்பாடாகவே இருக்கும். இவ்வாறு அவரால் அத்துமீறி செய்யப்பட்ட 27 இற்கும் மேற்பட்ட சட்டமீறல்கள் எங்களால் ஆவணப்படுத்தப்பட்டு பிரதம செயலாளருக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் ஆளுநருக்கும் உரிய அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதற்கான நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் எமது நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

கிழக்கு மாகாணமானாலும் வட மாகாணமானாலும் இலங்கைக்கு ஒரு சட்டம் தான். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டத்தை மீறி ஒருவர் செயற்படுகின்ற போது அவருக்கு எதிராக நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றவர்களால் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் பெப்ரவரி மாதத்திலேயே அவர் இங்கிருந்து அகற்றப்பட்டிருப்பார். நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பாரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது. எங்களால் அமுல்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் பல அமுல்படுத்தப்படவில்லை. உத்தியோகத்தர்கள் பலர் பிழையாக வழிநடத்தப்படுகின்றனர். 2021 ஆம் ஆண்டுக்கான வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டுக்கான 17 வேலைகள் இன்னும் முடிக்கப்படவில்லை.

இவை தொடர்பில் நாங்கள் ஆளுநருக்கோ பிரதம செயலாளருக்கோ அறிவுறுத்தினாலும் எந்த நடவடிக்கையுமில்லை. ஆனால் உள்ளூராட்சி ஆணையாளர் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். இதன் காரணமாகத்தான் நாங்கள் மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தொடுத்தோம். தடையுத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது.

தடையையும் மீறி 87 குற்றங்கள் செய்யப்பட்டதன் பேரில் நாங்கள் நீதிமன்ற அவதூறு வழக்கு போட்டோம். அதில் அவர் பத்து லட்சம் சரீரப் பிணையில் வெளிவந்திருக்கின்றார். அதன்படி அவர் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டு அவருக்கு எதிராக ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னும் அது செய்யப்படவில்லை. நிர்வாகமே பிழையாக நடப்பதற்கு தூண்டும் செயலாகவே இதனை நான் கருதுகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் இருக்கின்ற இந்த மாநகர சபையை குழப்புவதும் அதன் மூலம் அபிவிருத்திகளை தடுப்பதுமே இதன் முழு நோக்கமாகும். – என சுட்டிக்காட்டினார்.

# நீர்த்தேக்க வான்கதவுகள் மலையகத்திலும் திறப்பு!



மத்திய மலை நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையினை தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருகிறது.

கடந்த ஞாயிறு இரவு முதல் நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழைகாரணமாக ஆறுகள், நீரோடைகள் ஆகியன பெருக்கெடுத்துள்ளன.

நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதன் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளன.

இதனால் மேல் கொத்மலை நீர்த்தேகத்தின் இரு வான்கதவுகளும், மஸ்கெலியா - மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகளும், கெனியோன் நீர்த்தேக்கத்தில் ஒரு வான் கதவும், லக்ஷபான நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவும் நேற்று (திங்கட்கிழமை) காலை திறக்கப்பட்டன. காசல்ரீ நீர்த்தேக்க பகுதியில் நேற்று காலை 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதனால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதேவேளை நோர்ட்டன்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப்பகுதியில் கடுமையான மழை பெய்து வருவதானால் அந்த நீர்த்தேக்கத்தில் ஆறு கதவுகள் ஊடாக நீர் வான்பாய்கின்றன.

எனவே நீர்த்தேக்கத்துக்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தமிழர்கள் எவரையும் கட்டாயப்படுத்தி திருப்பியனுப்போம்

அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் யாரையும் கட்டாயப் படுத்தி இலங்கைக்கு அனுப்பமாட்டோம். அவர்களின் ஒப்புதல் படியே செயல்படுவோம் என தமிழக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித் துள்ளார் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னை நந்தனத்தில் அலீப் மருத்துவ அறக்கட்டளையை சிறுபான் மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தா. வேலு, தி.நகர் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண் டனர்.

அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அமைச் சர் செஞ்சி மஸ்தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் 110 இன் விதியின் கீழ் இலங்கை வாழ் தமிழர்கள் தமிழகத்தில் 108 முகாம்களில் வசித்து வருகின்றனர். 2 முகாம்கள் பொலிஸ் கட்டுப்பாட்டில் உள்ளன. மற்ற 106 முகாம்களில் 12 முகாம்களுக்கு சென்று நான் ஆய்வு செய்த போது, அந்த ஆய்வின் அறிக்கையின் படி முதல்வர் கலைஞரின் திட்டம் தொடரவேண்டும் என்று அகதிகள் தெரிவித்தனர்.

317 கோடி ரூபா செலவில் அவர்களுக்கு உணவு, உடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் புதிதாக வீடுகள் கட்டித் தரக்கூடிய திட்டம், கல்வி திட்டம், படித்தவர்களுக்கு தனியார் நிறுவனத்தில் வேலை வாங்கி தரும் நிலையை உருவாக்கும் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டு தொடர்ந்து அரசின் உத்தரவுகள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

18 அரசாணைகளை முதல்வர் போட்டுள்ளார். தற்போது கூட 3 அரசாணைகளுக்கு நான் கையொப்பமிட்டு வந்துள்ளேன் என அமைச் சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, இலங்கை வாழ் தமிழர்களுக்கு சிலிண்டர் வழங்கும் பணி நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். அமைச்சர் என்ற முறை யில் நாங்கள் எப்போதும் இலங்கைத் தமிழர்களை காப்பவர்களாக இருப்போம். யாரையும் கட்டாயப்படுத்தி இலங்கை அனுப்பமாட்டோம், அவர்களின் ஒப்புதல் படியே செயல்படுவோம் என்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்வித் தெய்வமானவளே கருணையுடன் அருள்புரிவாய்!

(இன்று கலைமகள் பூஜை ஆரம்பம் அதையொட்டி இக் கவிதை பிரசுரமாகின்றது.)

**கற்பனையாய் வருவாய் கவிதையாய் வருவாய்
காவியமாய் வருவாய் கருத்துப் பெட்டகமாவாய்
சொற்பதமாய் வருவாய் சுந்தரமாய் வருவாய்
நற்பதத்து நாயகியே நாளுமெமக் கருள்புரிவாய்**

**வெள்ளைக் கமலத்தை விரும்பியே ஏற்றாயே
வீணையினைக் கரமேந்தி மீட்டுகிறாய் அறிவிசையை
தெள்ளுதமிழ் நாம்பாட செய்தவளும் நீயன்றோ
நல்லதமிழ் கொண்டுன்னை நாம்பரவி நிற்கின்றோம்**

**குழந்தை மொழியினிலும் குயிலின் குரலினிலும்
கொஞ்சும் கிளியினிலும் குடிபுகுவாய் நீயென்றும்
வஞ்ச மனமுடையார் வண்ணமுற வருவதற்கு
வாண்மையுடை கல்வியினை வழங்கிடுவாய் கலைமகளே**

**கல்வியினை நாடாதார் கணக்கின்றி இருக்கின்றார்
கல்விகற்க விருப்புடையார் வசதியின்றித் தவிக்கின்றார்
கல்வியினைக் காசாக்கும் கசடர்பலர் பெருகிவிட்டார்
கல்வியினைப் பெற்றுநிற்க கருணைகாட்டு கலைமகளே**

**கல்வியெனப் பலபட்டம் பெற்றிட்டார் நாட்டினிலே
கண்ணியத்தைக் குழிதோண்டி புதைத்துமே நிற்கின்றார்
கல்வியதன் பெறுமதியைக் கருத்திலவர் கொள்ளாமல்
கயமைக்குணம் கொண்டுள்ளார் கண்பாராய் கலைமகளே**

**குருவாகி நிற்கின்றார் குறைகளையும் கொண்டுள்ளார்
குருநாடிப் போவோர்க்கு குந்தகமும் கொடுக்கின்றார்
குருமாரின் குறைகளைய கொடுத்திடுவாய் நற்பாடம்
குருவாகி இருக்கின்ற குணக்குன்றே வேண்டுகிறோம்**

**கல்வியெனும் பெருங்கடலில் கசடுபல கலக்கின்றார்
கல்வியெனும் பெருங்கடலின் கசடறுப்பாய் கலைமகளே
கல்வியெனும் பாற்கடலை கருத்துடனே சுவைப்பதற்கு
கல்வித் தெய்வமானவளே கருணையுடன் அருள்புரிவாய்**

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா

# 1,299 கிலோ உலர்ந்த மஞ்சள் கற்பிட்டிப் பிரதேசத்தில் மீட்பு!



கற்பிட்டி கண்டல்குளி கடற்பிரதேசத்தில் 1,299 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற் றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படை யினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இந்தி யாவைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் குறிப்பிட்டனர். வடமேற்கு கடற்படை கட்டளை யின் பி 424 அதிவேக ரோந்து கப்பல் மூலம் குறித்த பகுதியில் கடற்படையினர் ரோந்து நட வடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது சர்வதேச கடல் எல்லையை மீறி, இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்த இந்தியப் படகு ஒன்றை கடற்படையினர் சோதனை செய்தனர்.

இதன்போது, சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 1,299 கிலோ கிராம் நிறையுடைய 52 மூடைகளில் பொதி செய்யப்பட்ட உலர்ந்த மஞ்சள் குறித்த இந்தியப் படகில் காணப்பட்டதாக கடற்படை யினர் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, 1,299 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகளை கைப்பற்றிய கடற்படை யினர், இந்தியப் படகைத் தமது பொறுப்பில் எடுத்ததுடன், குறித்த படகில் பயணித்த 4 இந்தி யர்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய் தனர்.

உள்ளூர் பகுதிகளுக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லும் நோக்கில் குறித்த உலர்ந்த மஞ்சள் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கி றோம் என கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட உலர்ந்த மஞ்சள் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய கொரோனா தொற்று நீக்கி தெளிக்கப்பட்டுள்ளதுடன், 1,299 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகத் தமது பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன எனக் கடற் படையினர் தெரிவித்தனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட 4 இந்தியர் களும், கடற்படையினரால் தமது பொறுப்பில் எடுக்கப்பட்ட இந்தியப் படகினையும் இலங்கை யின் பிராந்திய கடல் எல்லைகளுக்கு அப்பால் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கற்பிட்டி பிரதேசத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் ஒக்ரோபர் 09 வரை யிலான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 279 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கடற்படையி னரால் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், 4 இந்தி யர்கள் உட்பட 16 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள்கள் விலையும் அதிகரிக்கும் சாத்தியம்!

சமையல் எரிவாயு, பால் மா, சீமெந்து உள்ளிட்ட பொருள்களின் விலையேற்றத்தைத் தொடர்ந்து இலங்கையில் வெகு விரைவில் எரிபொருள்களின் விலையையும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், சமையல் எரி வாயு, பால் மா மற்றும் சீமெந்து உள்ளிட்ட பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துள் ளது.

மேலும், இந்த அதிகரிப்பை அடுத்து பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளின் விலையை யும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையிலேயே, தற்போது எரிபொருள் களின் விலையையும் அதிகரிக்குமாறு பெற் றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் வலியு றுத்தியுள்ளார்.

குறித்த கூட்டுத்தாபனத்திற்கு 70 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ள காரணத்தாலேயே இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளு மாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், எதிர்வரும் நாள்களில் எரிபொருள்க ளின் விலையும் உயர்வடையலாம் எனத் தெரி விக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்க் கடவுள் ஆலயத்தின் தலைமகனுக்கு யாழ்ப்பாண தமிழ்விவி சங்கத்தின் அஞ்சலிகள்!

நல்லூர் கந்தன் ஆலயத்தின் தலைமை நிர்வாகி குமாரதாஸ மாப்பாண முதலியார் இயற்கை எய்திய செய்தி உலகம் வாழ் தமிழ் மக்களுக்கு கவலை தரும் செய்தி. அவரது வாழ்வும் அந்த வாழ்வில் அவர் கடைப்பிடித்த நெறிமுறையும் யாழ்ப்பாணத் தமிழர்களின் வரலாற்றை எழுதும் போது தனித்தன்மை மிக்க அடையாளமாகத் திகழும். தமிழர்கள் தங்கள் தாய்ப்பூமியின் தலைநகராக யாழ்ப் பாணத்தையும் அதன் இதயமாக நல்லூரை யும் கொண்டாட விளையும் மற்றும் ஆவணப் படுத்தும் எண்ணங்களுக்கு சொல்லிலும் செயல் பெரிது என பல செயற்கரிய செயல்களை ஆற்றியவர் அமரர் அவர்கள்.

இவ்வாறு தமது இரங்கலுரையில் தெரிவித்துள்ளது யாழ்ப்பாணத் தமிழ்ச் சங் கம்.

அந்தச் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் இ. சர்வேஸ்வரா ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கட்டடக்கலை மரபுகளாலும் வழிபாட்டு முறை களின் தனித்துவங்களாலும் நல்லூர் எங்கள் தமிழ்க் கடவுள் முருகனின் ஆலயம் ஈழத் தமி ழர்களின் அடையாளம் என உலகத் தமிழர் கள் பெருமைகொள்ள உரிய வழிவகை களைச் செய்து வைத்தவர் மாப்பாணரே. நேரம் தவறாமை, நேர்த்தியான திட்டமிடல், ஆண்ட வன் முன் அனைவரும் சமம் எனும் சிந்தை, தோற்றத்தில் எளிமை, தன்முனைப்பற்ற தலை மைத்துவம் என பன்முக ஆளுமைகளைக் கொண்ட தலைமைத்துவ உதாரணமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய காலப்பாடம் ஒன்றை நாம் இன்று இழந்துள்ளோம்.

கரையற்ற வெள்ளை வேட்டிக் கலாசா ரத்தை நம் தமிழர்களிடம் புகுத்தியவர் அந்தக் கறையற்ற மனிதன் என்பது கண்கூடு நாம் கண்ட நிதர்சன உண்மை. தலைமுறை இடை வெளி எனும் முகாமைத்துவ சிக்கல் அற்று இயல்பாக நேர்த்தியாக பொறுப்புக்களை அனுப வங்களின் வழி தலைமுறைக் கையளிப்புச் செய்த அவரது ஆற்றல் என்றும் சிலாகித்து நினைக்கவல்லது. மூன்று தலைமுறைகள் ஒன்றாக நின்று இறைகாரியம் ஆற்றிய பொழுது களை காணும்போது மிக்க நெகிழ்ச்சியாக விருக்கும். இன்று அத் தலைமுறையின் முதல் பெருமகனை இழந்துள்ளோம்.

தன் முடிவுகளை எவருக்காகவும் விட்டுக் கொடுக்காத தலைமைத்துவ ஆற்றல் எல்லோருக் கும் வாய்ப்பதில்லை. அந்த ஆற்றல் வாய்த்த தலைவரின் பின்பற்றுநர்களாக இருக்கும் வாய்ப்பும் இலகுவில் எல்லோருக்கும் வாய்ப்ப தில்லை. இந்த இரண்டையும் யதார்த்தமாக்கிய வாழ்வியல் நல்லைக் கந்தன் ஆலயத்தில் நிகழ்ந்தேறியது. முருகனின் கட்டளைப்படி காரியங்கள் ஆற்றுகின்றேன் எனும் ஒற்றை முடிவுடன் பல செயல்களைச் செய்த பெருமகன் குமாரதாஸ மாப்பாண முதலியார்.

தூரநோக்குச் சிந்தனையுடன் அவர் நல்லூர் ஆலயத்தை மையப்படுத்தி ஆற்றிய பல காரி யங்கள் ஈழத் தமிழர்கள் வரலாற்றின் அடையா ளங்களாக என்றும் பேசப்படும். தமிழர்களின் தனித்துவ அடையாளமாக முன்னைய இராசதானி நல்லூரை மாற்றிய பெருமனின் பெருவாழ்வை வியந்து அவரது பிரிவால் துய ருற்று உலகம் வாழ் யாழ்ப்பாணத் தமிழர்கள் சார்பில் எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கின் றோம். – என்றுள்ளது.

# தமிழரைச் சயனைட் குப்பிகளையும், துப்பாக்கிகளையும் ஏந்த வைத்தவர்கள் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளே!

## இராஜாங்க அமைச்சரின் கருத்துக்கு சிறிதரன் எம்.பி. தக்க பதிலடி



தமிழ் இளைஞர்களைச் சயனைட் குப்பிகளையும், துப்பாக்கிகளையும் ஏந்த வைத்தவர்கள் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளே.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் கருத்துக்குப் பதிலளிக்கும்போதே சிறிதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த வாரம் நடைபெற்ற நயினாதீவு நீர்வழங்கல் திட்டத்துக்கான கடல்நீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய, கிராமிய மற்றும் பிரதேச நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, 'சயனைட் குப்பிகளையும், புத்தகங்களையும் ஏந்திய வடக்கு மாகாண இளைஞர்களை இன்று புத்தகங்களையும், பேனாவையும் ஏந்த வைத்திருப்பதாகவும், இந்த நல்லெண்ணத்திற்கு வித்திட்டவர்கள் இன்றைய ஜனாதிபதியும், பிரதமருமே' என்றும் குறிப்பிட்டிருந்த கருத்து உண்மைக்குப் புறம்பான புனைவாகும். அது அமைச்சரின் சிங்கள, பௌத்த பேரினவாத சிந்தனையையே எடுத்துக்காட்டுகிறது.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்தோ, அதன் வரலாறு பற்றியோ, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாய் குறித்தோ இராஜாங்க அமைச்சர் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், இத்தகைய கருத்துக்களை வெளியிட முன்னராவது வரலாற்றை அறிவதற்கு அவர் முயற்சித்திருக்க வேண்டும். இந்த நாட்டில் எழுபது ஆண்டுகளுக்கு மேலாகப் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு அடித்தளமிட்டது யார் என்பதையும், தமது சொந்த நாட்டில் இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து, அமைதிவழியில் போராடிப் பெறமுடியாது போன அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே தமிழர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக் கப்பட்டார்கள் என்பதை இனியாவது இராஜாங்க அமைச்சர் கற்றுக்கொள்வது அவரது அரசியல் எதிர்காலத்துக்கு தேவையானதாக அமையும்.

சுதந்திர இலங்கையில் என்ன நிகழ்ந்தது என்பதை அப்போது பிறந்தேயிராத அமைச்சர் அறிந்திருக்க மாட்டார். அதன் விளைவாகத்தான் அவர் வெளியிட்டுள்ள கருத்தும் அத்தனை அபத்தமாக அமைந்துள்ளது. 1957 இலும், 1965 இலும் இலங்கையில் இனச் சமத்துவத்தை அங்கீகரிக்க அடிப்படையாக அமைந்த பண்டா – செல்வா ஒப்பந்தத்தையும், டட்லி – செல்வா ஒப்பந்தத்தையும் சிங்கள அதிகாரப்பீடங்கள்தான் கிழித்தெறிந்தன.

பன்மைத்துவமற்ற அரசியலமைப்பை உங்கள் இனத்தவர்கள் தான் உருவாக்கினார்கள், பௌத்தத்தை மட்டும் முதன்மை பெற வைத்து, தரப்படுத்தலை சிங்களத் தலைவர்களே மேற்கொண்டார்கள், தமிழ்மொழியைப் புறக்கணித்து, தமிழர் தாயகத்தில் நிலவிய மரபுரிமை சார்ந்த கூட்டு வாழ்வைச் சிதைத்து, சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கினார்கள், இனவாதிகளை உருவாக்கி எம்மின மக்களை வெட்டிச் சரித்தும், சொத்துக்களை அழித்தும், தீயிட்டுக் கொழுத்தியும், தமிழ்ப் பெண்களின் மார்புகளில் சிங்கள 'ஸ்ரீ' ஐ கொதிக்கும் தாரால் குறிவைத்தும், பச்சிளம் குழந்தைகளைகொதித்ததார்ச்சட்டிகளுள் வீசி எறிந்தும், தமிழ் இளைஞர்களின் கண்களை உயிரோடு தோண்டி எடுத்தும் ஓரினத்தின் இருப்பை அடியோடு ஆட்டம் காண வைத்து, அவர்களின் உணர்வுகளை கொதிநிலைக்கு இட்டுச் சென்றது யாரென்பதை இந்த உலகம் அறியும்.

தமிழர்கள் ஒரு அறிவார்ந்த சமூகம் என்பதை எண்பித்த வரலாற்றுச் சாட்சியமாய், தமிழர்களின் தனிப்பெரும் கல்வி அடையாளமாய் இருந்த தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியமான யாழ்ப்பாணம் பொதுநூலகத்தை 1981 யூன் 30ஆம் திகதி நள்ளிரவு தீயிட்டுக் கொழுத்தி எமது இனத்தின் அறிவாண்மையைச் சிதைக்கும் செயலில் சிங்கள இனவெறியர்கள் ஈடுபட்டதை, அப்போது ஆறு வயதுச் சிறுவனாக இருந்த நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லைத்தான். இந்த அவலம் மிகுந்த வரலாற்றால் வெஞ்சினம் கொண்ட இளைஞர்கள் தான், வெகுண்டெழுந்து எமக்கான வர லாற்றைப் படைத்தார்கள். அடக்கப்படுகிற போது விடுதலை பெற வேண்டுமென்ற உணர்வு மனித சமூகத்தின் தன்னியல்பான குணாம்சம். அதனையே எங்கள் இளைஞர்களும் செய்தார்கள். அவர்கள் ஒருபோதும் வன்முறையை விரும்பியவர்களல்ல. ஆயுதங்களை அவர்கள் விரும்பி ஏற்றவர்களும் அல்ல. தங்களையும், தங்கள் இனத்தையும் தற்காத்துக் கொள்வதற்காக போராடி அதற்காகவே தங்கள் உயிர்களை ஈர்ந்தார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனே 'ஆயுதங்களை நாம் ஒருபோதும் விரும்பி ஏற்கவில்லை. அவை எம்மீது வலிந்து திணிக்கப்பட்டவையே' என்று 1985 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வெளிவந்த சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.

இவற்றைவிட சிங்கள இனவாத அரசு காலம்காலமாக மேற்கொண்டு வந்த தமிழினப் படுகொலைகளும், தமிழர்களின் வாழ்வியல்ப் போக்கைத் திசைமாற்றியதில் பெரும்பங்கு வகித்தன. வடக்கு இளைஞர்களைத் தாம் புத்தகமும், பேனாவும் தூக்க வைத்திருப்பதாகப் பெருமிதம் கொள்ளும் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, இனவாத அரசால் வயது வேறுபாடற்று மேற்கொள்ளப்பட்ட சிறுவர் படுகொலைகள் குறித்தும் அறிய முற்பட வேண்டும். நவாலிப் படுகொலை, நாகர்கோவில்ப் பாடசாலைப் படுகொலை, கொக்கட்டிச் சோலைப் படுகொலை, வாகரைப் படுகொலை, செஞ்சோலைப் படுகொலை, முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புப் படுகொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களில் கொல்லப்பட்ட ஆயிரக் கணக்கான அப்பாவிச் சிறுவர்களின் உயிரிழப்புக்களுக்கும், இறுதிப் போரின் போது இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து காணாமலாக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான சிறுவர்களுக் கும் நீதியைப் பெற்றுக்கொடுக்கத் திராணியற்ற பேரினவாத நாட்டில், தமிழ் மாணவர்களின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் அக்கறையும், பெருமிதமும் அடைவது நகைப்புக்கிடமான செயலாகும்.

வரலாறு இவ்வாறிருக்க, நல்லெண்ணத்திற்கு வித்திட்டதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிடும் இன்றைய ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது எம் இனம் மீது பிரயோகித்துவரும் அடிப்படை வன்முறைகள் கூடவா அமைச்சரின் கண்களுக்கு இன்னும் புலப்படவில்லை?. நாம் கண்ணீர் விட்டு அழவும் தடையுத்தரவு தருகின்றீர்கள். ஒவ்வொரு அப்பாவித் தாய், தந்தையின் நெஞ்சிலும் ஆணியால் அடிக்கிறீர்கள், தங்கள் தாய், தந்தையரின் கல்லறைகள் இல்லாது போன காலத்திலும், அவர்கள் புதையுண்ட நிலங்களை முத்தமிடத் துடிக்கின்ற பிள்ளைகளின் தலையிலே சம்மட்டியால் அடிக்கின்றீர்கள். அவர்களை நினைந்து அழுவதையும், தொழுவதையும் பயங்கரவாதம் என பறைசாற்றுகிறீர்கள். இலங்கை தேசத்தில் வாழ்கின்ற சிங்கள தேசிய இனம் போலவே நாமும் ஓர் தேசிய இனமாக, எமக்கென்றோர் தனித்துவமான பண்பாட்டு, விழுமியங்களோடு இந்த வரலாற்றுத் துயர்களை எல்லாம் மறந்து வாழ முற்படும் வேளையில் சர்வதேச மனித உரிமை சாசனங்களை மீறி, இலங்கையின் உள்நாட்டு அடிப்படை உரிமைகளுக்கு முரணாக, சர்வதேச சமவாயங்களின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கூட அங்கீகரிக்கத் தவறி, எமது சமூக, பண்பாட்டு, விழுமியங்களை நிராகரித்து 'பௌத்த புராண, இதிகாசமான மகாவம் சிந்தனைகளிலிருந்து சிங்களதேசம் மீண்டு வந்து தமிழ் மக்களுக்கு சமத்துவமான தீர்வொன்றைத் தருமென்று நான் துளியேனும் நம்பவில்லை' என்ற தமிழீழ தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரனின் சிந்தனையை மெய்ப்பிப்பதாகவே உங்கள் செயற்பாடுகள் இன்றும் அமைந்துள்ளன.

கைதுகள், காணாமலாக்கல்கள், நில ஆக்கிரமிப்பு, மரபுரிமைச் சின்னங்களை அழித்தல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என தமிழ்த்தேசிய இனம் மீதான உங்களின் அடிப்படை இனவன்முறைகள் இன்னும் இன்னும் அதிகரித்துச் செல்லும் அதிபயங்கரமான சூழலில் எமது போராட்டம் குறித்து கருத் துரைப்பதற்கு அருகதையற்ற இராஜாங்க அமைச்சர், சயனைட் குப்பியும், துப்பாக்கியும் ஏந்திய எங்கள் பிள்ளைகளை தாமே புத்தகங்களை ஏந்த வைத்திருப்பதற்காக தெரிவித்துள்ள கருத்தை அவரது அரசியல் அறியாமையின் வெளிப்பாடாகவே நான் பார்க் கிறேன் – என்றார்.

# அரசியல்வாதிகள் எமது எல்லைக்குள் வந்தால் ஓட ஓட அடித்து விரட்டுவோம்

## பருத்தித்துறை மீனவர்கள் பகிரங்க எச்சரிக்கை



(ந.லோகதயாளன்)

இந்திய இழுவைப் படகையும், தடை செய்யப்பட்ட அனைத்து மீனவ தொழில்களையும் உடனடியாக நிறுத்தும் வரை எந்த வொரு அரசியல் தலைவர்களும் தமது எல்லைக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் என்று பருத்தித்துறை முனை கடற்தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறை முனை கடற்தொழிலாளர்கள் நேற்று முன்னெடுத்த எதிர்ப்புப் போராட்டத்தின்போதே இந்த அறிவித்தலை விடுத்துள்ளனர்.

அத்தோடு, அரசியல் தலைவர்கள் தங்களுடைய கோரிக்கையை மீறி எமது இடத்துக்கு வரும் பட்சத்தில் அடித்துவிரட்டப்படுவார்கள் என்பதையும் தாம் உறுதியாகவும், மன வருத்தத்துடனும் தெரிவிப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி, தங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு யாரும் முன்வராவிட்டால் தாங்கள் மனித வெடிகுண்டுகளாக மாறி தங்களுடைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வன்முறைக் கும்பல் அட்டகாசம்!

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை, புனிதநகர் பகுதியில் வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வன்முறைக்கும்பல் ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அப்பகுதியில் உள்ள வர்களுடன் முரண்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் வெளியிடங்களில் இருந்து சுமார் 20 இற்கும் மேற்பட்ட வன்முறையாளர்கள் வாள்கள், கூரிய ஆயுதங்கள் உள்ளிட்டவற்றுடன் அப்பகுதிக்குள் இறக்கி அட்டகாசம் புரிந்துள்ளனர்.

அதன்போது சிலரின் வீடுகளுக்கு கல் வீசி தாக்குதல் நடத்தியதுடன், வேலிகள் சிலவற்றுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வந்தபோது வன்முறைக் கும்பல் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

அந்நிலையில் அப்பகுதி மக்களுடன் ஏற்கனவே முரண்பட்டு இருந்த அப்பகுதியைச் சேர்ந்த நபரைப் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# சட்டவிதிகளை மீறிய 85 பேர் கைது!

கொழும்பு, ஒக 12

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 560ஆக உயர்வடைந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தொடர் விலையேற்றத்தால் மூவின மக்களும் கொதிப்பு

## கோட்டா அரசு மீது கடும் சீற்றம்

**நாட்டில் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வருவதால் அனைத்து மக்களினதும்வாழ்வாதாரம்பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவும் உச்சம் தொட்டுள்ளது.**




தொடர் விலையேற்றம் குறித்து மூவின மக்களும் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். அரசு மீது விமர்சனக்கணைகளையும் பகிரங்கமாகத் தொடுத்து வருகின்றனர்.

பால் மாவின் விலை ஏற்கனவே அதிகரித்திருந்த நிலையில், நேற்றுமுன்தினம் முதல் அமுலுக்குவரும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை சீமெந்து மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் பேக்கரி உற்பத்திப் பொருள்கள், சாப்பாட்டு பார்ஷல், கொத்துரொட்டி மற்றும் தேநீர் உள்ளிட்ட பல பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாகப் பாணின் விலையை அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

450 நிறையுடைய ஒரு இறாத்தல் பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே 50 கிலோ சீமெந்து மூட்டையின் விலையும் 93 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க எரிபொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 70 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாலேயே விலை அதிகரிப்பு இடம்பெற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### தோல்வியை ஏற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைதூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை நேற்று சந்தித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசை நடத்தத் தெரியவில்லை என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தானாகவே இராணுவத்தின் ஆண்டு விழா மேடையில் பகிரங்கமாக ஒத்துக்கொண்டுள்ளார்.

நாங்கள் தோற்றுவிட்டோம் என்பதை ஒத்துக்கொள்கின்றோம் என்று அவர் கூறியுள்ளார்.

அப்படித் தோல்வியை ஒத்துக்கொள்பவர் பதவியை உடனடியாக இராஜிநாமா செய்து விட்டுச் செல்ல வேண்டும்.

ஜனாதிபதி இரண்டு விடயங்களைச் சொன்னார். தேர்தலை நடத்துவேன், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன் என்று அவர் கூறினார். ஆனால், நாட்டில் உயர்ந்து செல்லும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவேன் என்று அவர் குறிப்பிடவில்லை. அதேபோன்று விவசாயிகளின் உரம் சம்பந்தமாகவும் அவர் எதுவுமே சொல்லவில்லை.

மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை குறித்துப் பேசாமல். அரசமைப்பை மாற்றுவேன் என்றும், தோல்வியை ஒப்புக்கொள்கின்றேன் என்றும் அவர் சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும் - என்றார்.

### நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் 402 நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 80 ஆயிரத்து 499 ஆக அதிகரித்துள்ளது.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



